SIVANMANAI



# திருவாசகம்

**பதிகம்: திருவேசறவு**

**திருப்பெருந்துறையில் அருளியது**

*** * * * ***

## திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

*** * * * ***

இரும்புதரு மனத்தேனை ஈர்த்துஈர்த்து என்என்பு உருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினை உன்கழல் இணைகள்
ஒருங்குதிரை உலவுசடை உடையானே நரிகள் எல்லாம்
பெருங்குதிரை ஆக்கியவாறு அன்றேஉன் பேரருளே.

பண்ஆர்ந்த மொழிமங்கை பங்காநின் ஆளானார்க்கு
உண்ஆர்ந்த ஆரமுதே உடையானே அடியேனை
மண்ணார்ந்த பிறப்பு அறுத்திட்டு ஆள்வாய் நீ வாஎன்னக்
கண்ணார உய்ந்தவாறு அன்றேஉன் கழல்கண்டே.

ஆதம்இலி யான் பிறப்புஇறப்பு என்னும் அருநரகில்
ஆர்தமரும் இன்றியே அழுந்துவேற்கு ஆவாஎன்று
ஓதம்மலி நஞ்சுண்ட உடையானே அடியேற்குஉன்
பாதமலர் காட்டியவாறு அன்றேஎம் பரம்பரனே. 3

பச்சைத்தாள் அரவுஆட்டீ படர்சடையாய் பாதமலர்
உச்சத்தார் பெருமானே அடியேனை உய்யக்கொண்டு
எச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே அச்சோஎன்
சித்தத்து ஆறு உய்ந்தவாறு அன்றேஉன் திறம் நினைந்தே.

THIRUVASAGAM GROUP
Scan this QR code using the WhatsApp Camera to join this group

கற்றறியேன் கலைஞானம் கசிந்துஉருகேன் ஆயிடினும்
மற்றறியேன் பிறதெய்வம் வாக்குஇயலால் வார்கழல்வந்து
உற்றுஇறுமாந்து இருந்தேன் எம்பெருமானே அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்குஇடுமாறு அன்றே நின்பொன் அருளே.

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவேன் நின்அருளால்
உய்ஞ்சேன் எம்பெருமானே உடையானே அடியேனை
அஞ்சேல் என்று ஆண்டவாறுஅன்றே அம்பலத்து அமுதே.

என்பாலைப் பிறப்புஅறுத்து இங்கு இமையவர்க்கும் அறியஒண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந்துறை உறையும் சிவபெருமான்
அன்பால்நீ அகம்நெகவே புகுந்தருளி ஆட்கொண்டது
என்பாலே நோக்கியவாறு அன்றே எம்பெருமானே.

மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா
ஒத்தானே பொருளானே உண்மையுமாய் இன்மையுமாய்ப்
பூத்தானே புகுந்துஇங்குப் புரள்வேனைக் கருணையினால்
பேர்த்தேநீ ஆண்டவாறு அன்றே எம்பெருமானே.

மருவு இனியமலர்ப்பாதம் மனத்தில் வளர்ந்து உள்ளுருகத்
தெருவுதொறும் மிகஅலறிச் சிவபெருமான் என்றுஏத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலில் படிவாமாறு
அருள்எனக்கு இங்குஇடைமருதே இடங்கொண்ட அம்மானே.

நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய் இன்அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனதுள்ளம் புகுந்து அடியேற்கு அருள்செய்தான்
ஊன்ஆரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தஅன்றே வெறுத்திடவே.

**திருச்சிற்றம்பலம்**

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

*** * * * ***